2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சேரன்மகாதேவி கோட்டம், தெற்கு வீரவநல்லூர் கிராமத்தில் சர்வே எண் 250/2–ல் தனியார் பேச்சு வார்த்தைமூலம் ஒரு ஏக்கர், ஒரு சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 30 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கிய நிதிமூலம் தனி நபர் பேச்சுவார்த்தைமூலம் எடுக்கப்பட்டு, கருவந்தா கிராம அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 292, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

292—

போக்குவரத்துப் பணிமனை

***6805—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூரில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் சார்பாக சூலூரில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சூலூரில் இரண்டு ஏக்கர்

நிலம் ஒதுக்கீடு செய்து தரக் கோரி மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டது. சூலூர் பேரூராட்சி சார்பில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைப்பதற்கு 1.5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, சூலூர் வட்டாட்சியர், மாவட்ட நிருவாகத்திற்குப் பரிந்துரை செய்துள்ளார்கள். நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்னர், பணிமனை அமைக்கும் பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் வட்டம் 160 கிராமங்கள், 7 பேரூராட்சிகள், இரண்டு ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்தப் பகுதியில் அதிக மக்கள்தொகை இருக்கின்ற காரணத்தினால், பேருந்து வசதிகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. சிறப்புப் பேருந்துகள் விழாக் காலத்திலேயும் மற்றும் அரசுத் தேர்வுகள் நேரத்திலும் இயங்கும்போது, பேருந்துகள் பழுதடைந்து நின்றால், டிப்போ இருந்தால்* spare *வண்டிகளை அனுப்ப வசதியாக இருக்கும்.*

காலை வேளையில் பள்ளி மாணவர்களும், தொழிலாளர்களும், திருப்பூர், பல்லடம் மற்றும் கோவை சென்று வர வசதியாக பணிமனை இல்லாததால், பேருந்துகள் கோயம்புத்தூர் டிப்போ சென்று சூலூர் வர காலதாமதம் ஏற்படுகின்றது. சூலூர் இரயில் நிலையம் வளர்ச்சி அடையும் பட்சத்தில், பணிமனையும் இருந்தால் வசதியாக இருக்கும். கோயம்புத்தூர் மாநகராட்சியில் கிட்டத்தட்ட 900 பேருந்துகள் இருக்கின்றன. அனைத்துப் பேருந்துகளுமே பாதுகாப்பு இல்லாமல், இரவு நேரங்களில், ரோடு ஓரத்தில் நிறுத்தப்படுகின்றன. இதனால், பேருந்துகளுக்கு அதிக சேதாரம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்விக்குச் சம்பந்தமான கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடுமட்டுமல்லாமல் அதிக தூரம் சென்று வர*

2013 ஏப்ரல் 22]

வேண்டியுள்ளது. பணிமனையை அமைத்தால் டீசல் மிச்சமாகும். சூலூரிலிருந்து 20 கிலோ மீட்டர் சென்று வர வேண்டியுள்ளது. ஆகவே, உடனடியாக பணிமனையை அமைத்தால், அரசுக்கும் பணம் மிச்சமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகள் எந்தப் பணிமனையிலும் சாலையிலோ அல்லது வெளியிலோ நிறுத்தக்கூடாது என்ற சீரிய நோக்கத்தோடு தொலைநோக்குப் பார்வையோடு இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 43 பணிமனைகள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்தப் புதிய பணிமனைகள்மூலம் பேருந்துகள் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டதன்மூலம், 2008–2009 ஆம் ஆண்டு இயக்கப் பேருந்துகளுடைய எண்ணிக்கை 18,146 ஆகும். அந்த 18,146 பேருந்துகள் இருக்கின்றபோது, இயக்கத்தின்போது, வழித்தடத்தில் பழுதடைந்த பேருந்துகளின் எண்ணிக்கை 9,003. ஆனால், 2011–2012 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு தொலைநோக்குத் திட்டங்களோடு 2011–2012 ஆம் ஆண்டு இயக்க பேருந்துகளின் எண்ணிக்கை 19,507 இருக்கின்றபோது, வழித்தடத்தில் இயக்கத்தின்போது பழுது ஏற்பட்டவை 2,882 மட்டுமே. அதேபோன்று 2012–2013 ஆம் ஆண்டு 20,500 இயக்கப் பேருந்துகள் வழித்தடத்தின்போது பழுது ஏற்பட்டவை 2,159. இப்படி எந்த வழித்தடத்திலும் இயக்கத்தின்போது பேருந்துகள் பழுது ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் புதிய பணிமனைகளை படிப்படியாக அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி சூலூரில் பணிமனை அமைக்க ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அந்த இடம் சூலூர் பேரூராட்சியின் சார்பில் கேட்கப்பட்டு இருக்கிறது. இடம் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்பு, பணிமனை அமைப்பதற்கு உண்டான பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

293—

மீன்பிடி வலை பின்னும் கூடம்

***4934—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பஞ்சல் மீனவர் கிராமத்தில் மீன்பிடி வலை பின்னும் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பஞ்சல் மீனவ கிராமத்தில் 10 மீனவக் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. மொத்தமே 12 மீனவர்கள் அதாவது இரண்டு ஃபைபர் படகுகள் மற்றும் 3 கட்டுமரங்களைக் கொண்டுதான் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பிடிக்கும் மீன்களை அருகிலுள்ள பெருமணல் மீனவ கிராமத்தில் விற்பனை செய்து வருகின்றனர். இம்மீனவர்களில் பெரும்பாலான மீனவர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகவும் உள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகள் அனைத்தும் இந்த பெருமணல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவே பயன்பெற்று வருகின்றனர். எனவே, 12 மீனவர்கள் மட்டுமே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் பஞ்சல் கிராமத்தில் வலை பின்னும் கூடம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்